**செய்தி வெளியீடு எண். 360** **நாள்: 24.07.2019**

**மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலம் சார்பாக, மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான தேசிய அடையாள அட்டை வழங்கும் முகாமை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.**

திருவள்ளூர் மாவட்டம், மணவாளநகர், தனியார் மன நல காப்பகத்தில், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலம் சார்பாக, மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான தேசிய அடையாள அட்டை வழங்கும் முகாமை, மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.மகேஸ்வரி ரவிக்குமார்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (24.07.2019) துவக்கி வைத்தார்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது :

மனநலம் பாதிக்கப்பட்டோருக்கான தேசிய அடையாள அட்டை, பாதிக்கப்பட்ட மக்களைச் சென்றடைய வேண்டும் என்ற நோக்கத்தோடு இதுபோன்ற முகாம்கள் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பாக, நடத்தப்பட்டு வருகிறது. இத்திட்டம் குறித்த விழிப்புணர்வு இல்லாதவர்களும், இந்த வாய்ப்பை பயன்படுத்தி அறிந்து கொண்டு, பிறருக்கும் உதவும் வகையில் செயல்படலாம். ஒரு குடும்பத்தில் மனநலம் குன்றியோர் இருப்பின், அந்த குடும்பத்தார் பாதிக்கப்பட்டோரிடம் அன்போடும், அரவணைப்போடும் செயல்பட வேண்டும். பாதிப்படைந்தவர்கள் மீண்டு, இயல்பு நிலைக்கு வர, பல்வேறு சிகிச்சைகள் மற்றும் மருத்துவ உதவிகள் புரிய மாவட்ட நிர்வாகம் துணை நிற்கும்.

எல்லோருடைய வாழ்விலும் சங்கடங்கள் வராமல் இருப்பதில்லை, இருப்பினும் அவைகளை நமது ஆழ் மனதிற்கு கொண்டு செல்லாமல், மன உறுதியோடு கடந்துச் சென்றால், இதுபோன்ற பாதிப்புகளுக்கு ஆட்படாமல் இருக்கலாம். மேலும், யோகா, தியானம் போன்ற வழிமுறைகளை கடைபிடிப்பதனால் மனதிற்கு வலிமை ஏற்படுகிறது.

எனவே, இம்முகாமிற்கு வந்துள்ள, பாதிப்பிற்குட்பட்ட அனைவரும் குணமடைந்து அவரவர் குடும்பத்தினருடன் குதுகலமாக வாழ எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன் என மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் திரு.பாலாஜி, இணை இயக்குநர் (நலப்பணிகள்) மரு.பி.வி.தயாளன், அரசு அலுவலர்கள் மற்றும் மன நல காப்பக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**